கணிப்பொறிக்கு அறிமுகம்
மாதிரி வினாத்தாள் - 2

11th Standard

Reg.No. :

**கணிப்பொறியியல்**

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:00:00 Hrs Total Marks : 40

## பகுதி - அ

10 x 1 = 10

1) ஒரு கணிப்பொறியின் செயல்பாடுகள் எதன் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது?
(a) மென்பொருள் (b) தகவல் (c) தரவு (d) வன்பொருள்

2) பின்வருவனவற்றுள் எது தரவுகளை ஆராய்ந்து தகவல்களை உருவாக்குகிறது?
(a) வன்பொருள் (b) மென்பொருள் (c) செயலகம் (d) மையச்செயலகம்

3) எது நுண் கணிப்பொறியை உலகுக்கு அறிமுகப்படுத்தியது?
(a) நுண்செயலி (b) நினைவகம் (c) செயலகம் (d) தேக்கச் சாதனங்கள்

4) எந்த மென்பொருள் தரவுகளை சீரான முறையில் தேக்கி பாதுகாக்கவும், தரவுகளில் இருந்து தேவையானவற்றைத் திரட்டித்தருவது மற்றும் தரவுகளை உள்ளிடவும், சீராக வைக்கவும் உதவுகிறது?
(a) விரிதாள் (b) சொல்செயலி (c) தகவல் தள மேலாண்மை (d) துணை செய்யும் மென்பொருள்

5) எது உரைகளை உள்ளிட, சீராக்க மற்றும் அச்சிட உதவுகிறது?
(a) விரித்தாள் (b) சொல்செயலி (c) தகவல்தள மேலாண்மை (d) அமைப்பு மென்பொருள்

6) எது தொடர்ந்து மாறும் மதிப்புகளைக் கொண்டு செயல்படும் கணிப்பொறி?
(a) இலக்கவகை (b) கலப்பின வகை (c) ஒப்புமைவகை (d) ஒப்புமைவகை மற்றும் கலப்பின வகை

7) அடிப்படைத் தரவுகள் கணிப்பொறியால் எதனைக் கொண்டு மாற்றப்படுகின்றன?
(a) தரவு (b) தகவல் (c) நிரல்கள் (d) நினைவகம்

8) சுழல் சக்கர கணிப்பானை உருவாக்கிய அறிஞர்
(a) பிளேய்ஸ் பாஸ்கல் (b) வில்லியம் ஆட்ரெட் (c) ஜான் நேப்பியர் (d) சார்லஸ் பாபேஜ்

9) UNIVAC என்பதன் விரிவாக்கம்?
(a) Universal Automatic Computer (b) Universal Auto Call (c) Universal Automobile Computer (d) Universal Automatic Computer

10) PDA என்பதன் விரிவாக்கம்?
(a) Personal Digital Assistants (b) Personal Difficult Assistants (c) Personal Design Assistants (d) Personal Design Associate

## பகுதி - ஆ

10 x 2 = 20

11) செயல்முறை என்றால் என்ன?
12) சொல் செயலி என்பது என்ன?
13) இயக்க அமைப்பின் செயல்பாடு என்ன?
14) ஒப்புமை வகை கணிப்பொறி என்றால் என்ன?
15) மடிக் கணிப்பொறி என்றால் என்ன?
16) பயன்பாட்டு மென்பொருள் என்றால் என்ன?
17) விரிதாள் என்றால் என்ன?
18) இலக்கவகைக் கணிப்பொறி என்றால் என்ன?
19) கலப்பினக் கணிப்பொறி என்றால் என்ன?
20) இன்று அதிக அளவில் பயன்படும் மென்பொருள் எது?

## பகுதி - இ

2 x 5 = 10

21) மீக் கணிப்பொறி, முதல்நிலைக் கணிப்பொறி, சிறு கணிப்பொறி மற்றும் நுண் கணிப்பொறிகளின் முக்கிய அம்சங்களை விளக்குக.
22) கணிப்பொறி வன்பொருள்களில் உள்ள பகுதிகளைக் கூறி விளக்குக.

******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in